**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 3 ம் நாள்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண்.1075/2017**

<u>CNR.No.TNCB17-001755-2017</u>

1. ராமாயி, க/பெ. லேட் K.V. முத்துசாமி என்கிற முத்துசாமி,
இந்து, வயது 77, க.எண்.2/100, 4-வது குறுக்கு வீதி,
மதியழகன் நகர், சூலூர் தாலுக்கா, கோவை.

2. முனியப்பன், த/பெ. லேட் K.V. முத்துசாமி என்கிற முத்துசாமி,
இந்து, வயது 59, க.எண்.2/100, 4-வது குறுக்கு வீதி,
மதியழகன் நகர், சூலூர் தாலுக்கா, கோவை.

3. ரெங்கம்மாள், த/பெ. லேட் K.V. முத்துசாமி என்கிற முத்துசாமி,
க/பெ. அழகர்சாமி, இந்து, வயது 65, க.எண்.20, கூவகபட்டி
கிராமம், வேடசந்தூர், திண்டுக்கல்.

4. வீரம்மாள், த/பெ. லேட் K.V. முத்துசாமி என்கிற முத்துசாமி,
க/பெ. பழனிச்சாமி, இந்து, வயது 63, க.எண். 100/8 , கூவகபட்டி
கிராமம், வேடசந்தூர், திண்டுக்கல்.

5. முருகம்மாள், த/பெ. லேட் K.V. முத்துசாமி என்கிற முத்துசாமி,
க/பெ. சக்திவேல், இந்து, வயது 56, க.எண்.68, கூவக்கபட்டி
கிராமம், வேடசந்தூர், திண்டுக்கல்.

(Amended as per order in I.A.No.142/2018 Dated 29.01.2018) ... **வாதிகள்**

//எதிர்//

புஷ்பா, க/பெ. சதாசிவம், வயது 47, க.எண்.43,

மதியழகன் நகர், சூலூர் தாலூக்கா, கோவை. ... **பிரதிவாதி**

1ம் வாதியின் கணவரிடம் பிரதிவாதி கிரயம் பெற்றதாகக் கூறப்படும் 21.05.1992 தேதிய 1732/1992 என்ற எண்ணில் சூலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தை செல்லாது என்று ரத்து செய்யக்கோரியும், தாவா சொத்தை விற்பனை, குத்தகை, அடமானம், தானம், செட்டில்மெண்ட் போன்ற எந்தவிதமான வில்லங்க விவகாரங்களுக்கும் பிரதிவாதி உட்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத் தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கலான நாள் : 18.12.2014

வழக்கு மூலம் எழுந்த நாள் 27.06.1979, 14.02.2007, 15.09.2014, 13.10.2014, 11.11.2014 சூலூர் தாலுக்கா இந்நீதிமன்ற அதிகார எல்லை வரம்புக்குட்பட்டது.

வாதிகள் இந்த தாவாவின் மதிப்பு ரூ.2000/- என்றும், தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் தாவா மதிப்பீட்டு சட்டப்படி 25(d) மற்றும் 27(c) பிரிவுகளின் படி ரூ.151- கட்டணமாக செலுத்தியுள்ளார்கள்.

<u>**தாவா மதிப்பீட்டு விவரம்**</u>

1ம் வாதியின் கணவர் எழுதி கொடுத்ததாகக் கூறும் 21.05.1992 தேதிய ரூ. 1,000/- கிரையப் பத்திரத்தினை ரத்து செய்வதற்குண்டான தாவா சொத்தின் மதிப்பு

தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் தாவா மதிப்பீட்டு சட்டம் 25(d) ரூ.75.50/-

ன் கீழ் செலுத்தப்பட்ட தாவா கட்டணம்

| | |
|---|---|
| தாவா சொத்தினை வில்லங்க விவகாரங்களுக்கு உட்படுத்தக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகார மதிப்பு | ரூ. 1,000/- |
| தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் மற்றும் தாவா மதிப்பீட்டு சட்டம் 27(c) ன் கீழ் செலுத்தப்பட்ட தாவா கட்டணம் | ரூ.75.50/- |
| மொத்த தாவா மதிப்பு | ரூ.2000/- |
| மொத்த தாவா கட்டணம் | ரூ.151/- |

இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.கார்த்திகேயன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்பாணை

1). 1ம் வாதியின் கணவரிடம் பிரதிவாதி கிரயம் பெற்றதாகக் கூறப்படும் 21.05.1992 தேதிய 1732/1992 என்ற எண்ணில் சூலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தை செல்லாது என்று ரத்து செய்யக்கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

2). தாவா சொத்தை விற்பனை, குத்தகை, அடமானம், தானம், செட்டில்மென்ட் போன்ற எந்தவிதமான வில்லங்க விவகாரங்களுக்கும் பிரதிவாதி உட்படுத்தக்கூடாது என கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்ப்பளிக்கப்படுகிறது.

3). வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

4). செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

**செலவு தொகை பட்டியல்**

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

**சொத்து விவரம்**

திருப்பூர் ரிடிடு, சூலூர் சப்டிடு, பல்லடம் தாலூக்கா, சூலூர் நகர பஞ்சாயத்து போர்டு எல்லைக்குட்பட்ட, சூலூர் கிராமம் க.ச.பு.409/2B2 நெ.காலையில்

| | | |
|---|---|---|
| மாசாணன் காலியிடத்துக்கும் | - | வடக்கு |
| உம்முடைய காலியிடத்துக்கும் | - | கிழக்கு |
| கிழமேல் ரோட்டிற்கும் | - | தெற்கு |
| ராயப்பன் காலியிடத்துக்கும் | - | மேற்கு |

இதன் மத்தியில்

ஏ.0.3 க்கு ரூ.0.10 மூன்று செண்ட் விஸ்தீரணமுள்ள காலியிடமும், மாமூல் தடமும் சகிதம். இது வீட்டிடம், இது சூலூர் மதியழகன் நகர் 3-வது வார்டில் உள்ளது.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் நாளாகிய இன்று என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர், அசல் வழக்கு எண். 1075/2017

தீர்ப்பாணை

நாள்: 17.03.2026